**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**
**O.S. No. 78/2021**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 – ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 18.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுதா | ஜாதி | |
| க/ பெயர் | : சிவசுப்ரமணியன் | மதம் | |
| கிராமம் | : | தொழில் | |
| வட்டம் | : | வயது | |

**வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில்** குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்துக்களை எனது கணவர் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்லிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர எனது கணவர் பெயரில் வாய்தா ரசீது, நிவாரணம் செலுத்திய ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் வழங்கக்கூடாதென் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டப்பிறது சிட்டா, அடங்கல் போன்ற ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு என்னால் வாய்தா செலுத்தியதாகவோ, நிவாரணம் செலுத்தியதாகவோ ஆவணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு பசலிக்கும் பிரதிவாதிகள் நிவாரணம் வாங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் எனது அனுபவத்தை இடையூறு செய்தால இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகள் கிரையம் கேட்டதாகவும், நான் தர மறுத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கிரையம் பதிவு செய்து கொடுக்க சொல்லி கேட்டார் நான் மறுத்தேன். எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் செய்து கொடுக்க சொல்லி

கேட்டார் என்றால், எனது சொந்தமான சொத்தை அவர் எப்படி கேட்க முடியும். எனது கணவரிடம் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்க சொல்லி பிரதிவாதிகள் கேட்டார்கள் என்றால் இல்லை. எனக்கு செட்டில் ெமெண்ட் ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பாக தாவா சொத்துகள் பொறுத்த பேச்சு வார்ததைகள் அனைத்தும் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரை விசாரித்தால் உண்மை விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தாவா சொத்திலிருந்து 10கி.மீ தள்ளி இருக்கிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் மீது என்னால் புகார் கொடுக்கப்பட்டதற்கு தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் புகார் கொடுத்ததாக வழக்குரையிலும், நிரூபணவாக்கு மூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே புகார் கொடுத்திருந்தால் வழக்குரையிலும், நிருபணவாக்குமூலத்திலும் அது குறித்து சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தை குறித்து 1ம் பிரதிவாதியின் தகப்பனார் உத்திராபதி பிள்ளை 13.07.1992ல் எனது கணவருக்குமிடையே கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் 1991ல் சுந்தரம்பிள்ளை என்பவரிடம் தாவா சொத்தை அடமானம் வைத்திருந்தாலும் என்றாலும் அந்த கடனை திர்த்துக்கொண்டு அந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டாலும் சரியல்ல. கடந்த 13.07.1992 முதல் தற்போது வரை 1ம் பிரதிவாதி அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல.

நான் 1ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு சொத்தின் சுவாதீனம் கோரிதான் இந்த வழக்கை தாக்கல் செய்து இரு்க்க வேண்டும் என்றாலும் தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் இல்லாமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றாலும் சரியல்ல. இன்றைய தேதியில் தாவா சொத்தின் மதிப்பு அதிகரித்து விட்டதால், நானும், கணவரும் மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடமிருந்து சுவாதீனம் கோரி இந்த வழக்கை

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின்அனுபவம் என்னிடம் இல்லாமல் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாக விக்கிரபாண்டியம் கிராமத்தில் உள்ள நபர்கள் பஞ்சாயத்து பேசி 1ம் பிரதிவாதியிடமிருந்து தொகைகளை பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுக்க சொல்லி சொன்னார்கள் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்து வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.20 10:45:19 +0530

District Munsif
Mannargudi.